[23rd March 1963

கனம் திரு. பூ. கக்கன் : நிர்ப்பந்தம் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆ. தங்கவேலு : பிண்ணுக்கு வெளி நாடுகளுக்கு ஏற்று மதி செய்யப்படுவதால் விலை உயர்ந்திருப்பதாகச் சொல்லப்படு கிறது. அந்த ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தி குறைந்த விலையில் பிண்ணுக்கு கொடுக்க ஆவனசெய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தக் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. அ. தியாகராஜன் : மேல் நாடுகளில் பொருள் விலையை நிர்ணயித்து ஒவ்வொரு பொருளுக்கும் எவ்வளவு விலை கொடுக்க வேண்டும் என்று போர்டு எழுதிப் போட்டிருக்கிறார்கள். அது போல நம் இந்திய நாட்டில் இருக்கிற கடைகளில் இன்னின்ன அத்தியாவசியப் பண்டங்களை இன்னின்ன விலைக்கு விற்க வேண்டுமென்று நிர்ணயித்து கடைகளில் விலை போர்டு தொங்க விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நாம் விலையை நிர்ணயம் செய்யவில்லை. விலைவாசியெல்லாம் ஜனங்களுக்கே தெரியும். குறிப்பாக காய்கறி விலையைப் பொறுத்த அளவில் பத்திரிகைகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். வீட்டிலேயே உட்கார்ந்து கேட்கிற விலையைக் கொடுத்து விட்டு, அதிகமாக வாங்கிக் கொண்டு விட்டார்கள் என்று சொல்லக்கூடாது. அவர்களாகவே தெரிந்து கொள்ளவேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : மதிப்புக்குரிய பெண் அங்கத்தினர்கள் எல்லோருமே சேர்ந்து இந்தக் கேள்வியில் அக்கறை செலுத்திக் கேட்பதால் . . .

MR. SPEAKER : Next Question, Question No. 375-D.

Relief to goldsmiths

*357-D Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to start Co-operative Institutions for goldsmiths, as a measure of relief to them; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) Government have sanctioned a scheme for the organisation of four Industrial Co-operative Societies for Goldsmiths at Madras, Tiruchirappalli, Madurai and Coimbatore. The societies will be organised as multi-metal workers societies manufacturing not only gold ornaments but also silver vessels and precision parts in metal. Each of the four societies will be given a loan of Rs. 1,14,500 and a subsidy of Rs. 26,800 besides the free services of the following staff :

23rd March 1963]

One Master Craftsman on Rs. 225–15–375 p.m.

One Design Assistant on Rs. 180-5-200-10-300 p.m.

One Industrial Co-operative Officer-Secretary on Rs. 200-5-240-10-270 p.m.

Two Unskilled Assistants on Rs. 60 p.m. each.

One Watchman.

The societies will be registered and started on work shortly.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் வேலையில்லாமல் இருந்து தற்கொலை செய்து கொண்டவர்களின் வீட்டுக்காரர்களுக்கு உதவித் தொகை கொடுக்க சர்க்காரிடம் ஏதாவது திட்டம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரியான தகவல் எவ்வளவு தூரம் சரி என்றே தெரியாது. அதனால் 'ஹைப்பாத்தெடிகல்' கேள்விக்கு பதில் சொல்ல முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : நேற்றைய தினம் நம்முடைய கனம் முதல் அமைச்சரைச் சந்திக்கப்போன பொற்கொல்லர் ஒருவர் திருச்சியில் ஊர்வலத்தில் போனபோது வேலையில்லாத் திண்டாட்டத்தினால் இறந்திருக்கிறார். இந்த முறையில் பல பேர் பரிதாபமான நிலைமையில் இருக்கிறார்கள். மேலும், இந்த நிலையங்களை அதிகப்படுத்தி விரிவுபடுத்துவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நேற்று ஒருவர் இறந்து போனார் என்று செய்திப் பத்திரிகையில் பார்த்தோம். இறந்தவர்கள் எல்லாம் பொற்கொல்லர்கள் என்றோ, பொற்கொல்லராக இருக்கிறவர்களெல்லாம் இறக்க மாட்டார்கள் என்றோ சொல்ல முடியாது. என்ன நோய் இருந்ததோ, என்ன உடல் நிலை இருந்ததோ. பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து உடனே பொற்கொல்லர் இன்ன காரணத்தினால் இறந்தார் என்று சொல்லுவது அவ்வளவு சரியாக இருக்காது. பொற்கொல்லர்கள் இறக்காமல் இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று சர்க்கார் முயற்சி செய்கிறது. இதற்குத்தான் இந்த மாதிரி சொஸைட்டிகளெல்லாம் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

திரு. சி. பொன்னுசாமி : குறிப்பாக, நம் மாகாணத்தில் பொற்கொல்லர்கள் எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கணக்கிட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு பசு மாடு வாங்கிக் கொடுக்க மத்திய சர்க்காரிடமிருந்து பணம் கேட்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ரீஸ் ஆக்ட் பிரகாரம், பொற்கொல்லர்கள் ஏதாவது தனியாகத் தொழில் செய்ய முன்வந்தால் அவர்களுடைய சொந்த ஜாமீனில் 500 ரூபாய், 1,000 ரூபாய் கடன் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி: ஸார், இப்போது ஏற்படுத்தப் போகிற கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளையெல்லாம் முக்கிய தலைநகரங்களில் 4 இடங்களில் ஏற்படுத்தப் போவதாகத் தெரிகிறது. தாலூக்காக்களில் இருக்கும் பொற்கொல்லர்களுக்கும் ஏதாவது வழி வகை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதைத்தான் சொன்னேன். வேறு தொழில் செய்ய முன்வந்தால் அவர்களுக்கு ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட்டின் கீழ் உதவி கொடுக்கப்படும்.

திரு. எஸ். மாதவன்: இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்டில் ஷார்ட் கோர்ஸ் கொடுத்து வேலை பார்க்க விரும்புகிறவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த விதத் திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கிறது. என்ன ட்ரெயினிங் என்பதெல்லாம் இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேருகின்ற பொற்கொல்லர்களுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய பங்குத் தொகையைச் சர்க்கார் கடனாகக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஓரளவு கடனாகக் கொடுக்கும்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, பொற்கொல்லர்களுக்கு வேறு தொழில் செய்வதற்கு உதவியாக 500 ரூபாய், 1,000 ரூபாய் அளிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்கள். எந்தத் தொழிலைச் செய்தாலும், கடை வைத்தாலும் இந்த உதவித் தொகையைக் கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஜில்லாக்களில் இருக்கிற அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆஃப் இண்டஸ்ட்ரீஸைப் போய்ப் பார்த்தால் இந்த விவரங்களையெல்லாம் அவர்கள் சொல்லுவார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: ஆன் எ பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், ஸார். பொற்கொல்லர் திருச்சியில் இறந்தார் என்பது பற்றி, திருச்சி பெரிய கடை . . .

கனம் சபாநாயகர்: (மணியடித்து) அடுத்த கேள்வி. கேள்வி 357-இ.

Overbridge on the Thirupparankundram Road

* 357-E Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Works be pleased to State:

(a) whether overbridges are proposed to be built at the Railway level crossings near the Power House and the Meenakshi Mills Gate on the Thirupparankundram Road, Madurai; and